வடலூர் நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறை உத்திரவு

முன்னிலை :– முன்னிலை :–இரா.இரஞ்சிதா,M.Sc,B.Ed,M.Phil.,

ந.க.எண்.1003/2025/எப்1 நாள்:–05.11.2025

பொருள் :– மனைப்பிரிவு – வடலூர் நகராட்சி – வரன்முறை திட்டம் – சேராக்குப்பம் கிராமம் புதிய சர்வே எண் 235/12, 235/18, 250/6A. 250/6B, 250/7, 251/1A, 251/1B, 251/1C, 251/3, 251/4, 252/2, 252/3, 252/4, 252/5, 252/6, 252/7, மற்றும் 252/18A2–ல் 4.86 ஏக்கர் அல்லது 19660 ச.மீட்டர் பரப்பளவு நிலத்தில் அமைக்கப்பட்டுள்ள உத்தேச புதிய மனைப்பிரிவிற்கு குடியிருப்பு மனைப்பிரிவாக அங்கீகரித்து – இறுதி உத்தரவு வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :–

1. திரு.R.சிவராமன் த/பெ இராமானுஜம் அவர்களின் விண்ணப்பம், நாள்:10.06.2025,
2. மாவட்ட நகர ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் தொழில்நுட்ப அனுமதி ந.க.எண்.OHTNT94G/2025/TCP மற்றும். SWP/LP/AD DTCP (CUDD) எண்.68/2025, நாள் 05.06.2025,
3. வடலூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட தான பத்திர ஆவண எண்.1968/2025, நாள் 16.05.2025,
4. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் எண்.12843/2022/ TP2, நாள்.20.10.2022,
5. நகர் மன்ற தீர்மான எண்.877/2025, நாள்.16.10.2025,

******

பார்வை 1ல் காணும் திரு.R.சிவராமன் த/பெ இராமானுஜம் அவர்களின் கடிதத்தில் கடலூர் மாவட்டம் வடலூர் நகராட்சி சேராக்குப்பம் புதிய சர்வே எண் 235/12, 235/18, 250/6A. 250/6B, 250/7, 251/1A, 251/1B, 251/1C, 251/3, 251/4, 252/2, 252/3, 252/4, 252/5, 252/6, 252/7, மற்றும் 252/18A2–ல் 4.86 ஏக்கர் அல்லது 19660 ச.மீட்டர் இடத்தில் புதிய மனைப்பிரிவு அமைக்க அனுமதி கோரி விண்ணப்பிக்கப்பட்டதன் அடிப்படையில் பார்வை 2ல் காணும் கடலூர் மாவட்ட நகர ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் கடிதத்தில் மேற்படி மனைப்பிரிவிற்கு SWP/LP/AD DTCP (CUDD) எண்.68/2025 என எண்ணிடப்பட்டு 05.06.2025ல் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பார்வை 3ல் காணும் வடலூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணத்தின்படி சாலைகள் மற்றும் பொது உபயோக ஒதுக்கீடு உள்ளாட்சி உபயோக மனை பரப்பளவு (A) 76.24 சதுர மீட்டர் மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி (ம) பகிர்மான கழக (TANGEDCO) உபயோக மனை பரப்பளவு (B) 80.62 சதுர மீட்டர் பரப்பளவு இடம் தான பத்திரம் செய்து ஆவண எண்.1968/2025, நாள்.16.05.2025ல் தங்களால் இந்நகராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

Scanned by Camera Scanner

பார்வை 4ல் காணும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் மேற்படி மனைப்பிரிவில் அமைந்துள்ள அடிப்படை வசதிகளுக்கு தார்சாலை அமைக்கும் பணி மற்றும் குடிநீர் பகிர்மான குழாய் தங்களால் மேற்கொள்ளப்பட்டதில் தார்சாலையினை தலைமை பொறியாளர், அண்ணா பல்கலைக்கழகம், பனிக்கன் குப்பம், பண்ரூட்டி அவர்களால் ஆய்வு பணி மேற்கொள்ளப்பட்டு மூன்றாம் தரச்சான்று (THIRD PARTY INSPECTION FOR BITUMINOUS ROAD (PLOT) REPOT) 25.07.2025 நாளில் வழங்கப்பட்டுள்ளது. மேலும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு நகராட்சி பொறியாளரால் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு 04.07.2025 கட்டணம் செலுத்த மனுதாரருக்கு அறிவிப்பு வழங்கப்பட்டதில் ரூ.58.00 இலட்சம் (சிட்டி யூனியன் வங்கி காசோலை எண்.128918,நாள்.03.09.2025) செலுத்தப்பட்டுள்ளது. பராமரிப்பு பணிக்கு ரூ.4.86 இலட்சம் (சிட்டி யூனியன் வங்கி காசோலை எண்.128920, நாள்.09.09.2025) செலுத்தப்பட்டுள்ளது. மேலும் தெரு விளக்கு அமைக்க ரூ.2,14,262/- பற்றுசீட்டு எண்.PGCINB787633247, நாள்.24.09.2025ல் Online மூலம் செலுத்தப்பட்டுள்ளது.பார்வை 5ல் கண்டபடி நகரமன்றம் அனுமதி வழங்கியுள்ளது (நகர மன்ற தீர்மான எண்.877, நாள்.16.10.2025) எனவே, கடலூர் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் உத்தரவில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளுடன் புதிய மனைப்பிரிவிற்கு குடியிருப்பு மனைகளாக இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

ஆணையர்,
வடலூர் நகராட்சி
05.11.2025

இணைப்பு:- மனைப்பிரிவு ஒப்புதல் வரைப்படம்,

பெறுதல்:-

திரு.R.சிவராமன் த/பெ இராமானுஜம்,
எண் 12, தெற்கு தெரு,
பார்வதிபுரம், வடலூர்-607303,
கடலூர் மாவட்டம்

நகல்:-

1. உதவி இயக்குநர். கடலூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், கடலூர்.
2. உதவி இயக்குநர் (நில அளவை) கடலூர் மாவட்டம்,
3. சார் பதிவாளர்,வடலூர்,
4. நகராட்சி பொறியாளர் - நகராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட பொது உபயோக ஒதுக்கீடு மற்றும் சாலைகள் விபரத்தினை சொத்து பதிவேடு மற்றும் சாலைப் பதிவேட்டில் பதிவு செய்யும் பணிக்கு,

Scanned by Camera Scanner